01 ஜனவரி 2016

அதிமேன்மைதகு மைத்திரிபால சிறிசேன

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி

ஜனாதிபதிச் செயலகம்

கொழும்பு 01.

அதிமேன்மைதகு உங்களுக்கு,

## இலங்கையில் மரணதண்டனையை நீக்குவதற்கானப் பரிந்துரை

நாம் அதிமேன்மைதகு உங்களுக்கு எங்களுடைய மனமார்ந்த புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்த மங்களகரமான நாளில், மனித உரிமை கோட்பாடுகள் மற்றும் மதிப்புடன் இசைவான அதி உயர்மனிதப்பண்புள்ள சமூகத்தை நிலைநிறுத்தும் இலங்கையின் ஈடுபாட்டுக்கமைய இலங்கையில் மரணதண்டனையை நீக்க பரிந்துரை செய்வதற்கு நாங்கள் இச்சந்தர்ப்பத்தை எடுத்துக்கொள்கின்றோம்.

1996 ஆம் ஆண்டின் 21 இலக்க மனித உரிமைகள் ஆணைக்குழுச்சட்டத்தின் பிரகாரம், குறித்த சட்டத்தின் 10(இ) மற்றும் 10(ஈ) பிரிவுகளிற்கு அமைய அடிப்படை உரிமைகளை முன்னெடுத்துச்செல்வதற்கும் ஊக்கிவிப்பதற்கும் பாதுகாப்பதற்கும் சட்டவாக்க, நிர்வாகப் பணிப்புரைகளையும் நடபடிமுறைகளையும் தொகுத்தமைப்பதில் அரசாங்கத்திற்கு மதியுரை வழங்கலும் உதவுதலும், மேலும் தேசிய சட்டங்களும் நிர்வாகச் செயன்முறைகளும் சர்வதேச மனித உரிமைகளுக்கும், வழமைகளுக்கும், நியமங்களுக்கும் அமைய அமைந்துள்ளது என்பதினை உறுதிப்படுத்துவதற்கு எடுக்கப்படவேண்டிய வழிமுறைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு விதப்புரை செய்தல் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் ஒன்றாகும்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மரணதண்டனையை நீக்கும் பரிந்துரையை அதிமேன்மைதகு உங்களதும் அரசாங்கத்தினதும் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகின்றது, மரண தண்டனையானது கொடூர மற்றும் மனிதாபிமானமற்ற தண்டனையிலிருந்தான சுதந்திரம் மற்றும் உயிர் வாழும் உரிமைகளை கடுமையாக மீறுகின்றது, மிகக் கடுமையானதும் மாற்றமுடியாத தண்டனையுமாகும், அத்துடன் குற்றத்தை தடுப்பதற்கு திறனற்றதாகவும் உள்ளது என்று வளர்ச்சியடையும் உலகின் ஏற்புடைமையை விரைவாக இலங்கை அங்கீகரிக்க வேண்டுமென்பதே ஆணைக்குழுவின் நிலைப்பாடாகும். மரண தண்டனையை நீக்கியுள்ள 100




ප්‍රධාන කාර්යාලය / பிரதான அலுவலகம் / Head Office: 165, කිංසි පාර, කොළඹ - 08. / 165, கின்சி வீதி, கொழும்பு - 08. / 165, Kynsey Road, Colombo - 08.
දුරකථන / தொலைபேசி / Telephone: 94 - 11 - 2694925, 2685980, 2685981
සභාපති / தவிசாளர் / Chairman: 2696470
ලේකම් / செயலாளர் / Secretary: 2689558
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 2694924
ක්ෂණික / துரித அழைப்பு / Hotline: 2689064
ඊමේල් / மின்னஞ்சல் / e-mail: sechrc@sltnet.lk
වෙබ් / இணையம் / Web: www.hrcsl.lk

இற்கு மேற்பட்ட நாடுகளுடன் இணைந்து அடிப்படை மனித உரிமை கோட்பாடுகளுக்கும் உயிரின் புனிதத்தன்மைக்குமான இலங்கையின் ஈடுபாட்டினை மெய்பிக்க வேண்டும். ஏனைய 60 இற்கு மேற்பட்ட நாடுகள் நடைமுறையில் மரண தண்டனையை செயற்படுத்துவதில்லை.

இலங்கையின் சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடானது தெளிவாக மரண தண்டனையை தடைசெய்கின்றது. ஒவ்வொருவரும் உயிர்வாழும் உரிமை, சுதந்திரம் மற்றும் பாதுகாப்பாக வாழ்வதற்கான உரிமைகளைக் கொண்டுள்ளார்களெனக் கூறும் அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தின் உறுப்புரை 3 மனித உயிரின் புனிதத்தன்மையை உறுதிப்படுத்துகின்றது. அத்துடன் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேசக் கட்டுறுத்தின் உறுப்புரை 6 மரண தண்டனையை நீக்குவது விரும்பத்தக்கதென உறுதியாக வெளிப்படுத்துகின்றது.

அதிமேன்மைதகு உங்களுடைய கவனத்தை ஐக்கிய நாடுகள் பொதுச்சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட 1989 ஆம் ஆண்டு டிசம்பர் 15 ஆம் திகதிய 44/128 பிரகடனத்தின் மூலமாக குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேசக் கட்டுறுத்தின் மரண தண்டனையை நீக்குதல் என்றழைக்கப்படுகின்ற இரண்டாம் விருப்பத்துக்குரிய பின்னேட்டிற்கு செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம். மரண தண்டனை நீக்குதலானது மனித கௌரவத்தை உயர்த்துவதற்கும் படிமுறையான மனித உரிமைகள் வளர்ச்சிக்கும் பங்களிப்பு செய்யுமென அதன் முகவுரையில் பிரகடனப்படுத்தப்படுகின்றது. இவற்றை நிலைநிறுத்தி நாட்டின் மனித உரிமைகள் பாதுகாப்பின் முன்னேற்றுத்துக்கான இலங்கையின் ஈடுபாட்டிற்கமைய இலங்கை விருப்பத்திற்குரிய பின்னேட்டினை ஏற்று, அங்கிகரித்து மரண தண்டனையை நீக்குவதற்குரிய படிமுறைகளை எடுக்குமாறு நாம் பரிந்துரை செய்கின்றோம்.

1976 ஆம் ஆண்டு முதல் வழிவந்த அரசாங்கங்கள் மரண தண்டனையை அமுல்படுத்தவில்லை என்பதை வரவேற்கின்ற அதேவேளை, தண்டனைச்சட்டக்கோவை மற்றும் 1984 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க திருத்தப்பட்டவாறான நச்சுக்கள்,ஓபியம் மற்றும் ஆபத்தான ஔடதங்கள் கட்டளைச்சட்டம் உள்ளடங்கலாக மரண தண்டனையை வழங்குவதற்கு ஏற்பாடுகளையுடைய பல்வேறு சட்டங்களூடாக நீதிமன்றங்கள் தொடர்ச்சியாக மரண தண்டனையை வழங்கிவருவதையும் ஆணைக்குழு அவதானிக்கின்றது.

சர்வதேச மற்றும் ஒப்பீட்டுத்தன்மையான சட்டவியல் பார்வையில், மரண தண்டனையானது கொடூர, மனிதாபிமானமற்ற மற்றும் இழிவான தண்டனையாவதுடன் மனித உயிரின் புனிதத்தன்மையை மதிக்கவும் தவறுகின்றது என்ற நிலைப்பாட்டுடன் ஆணைக்குழுவும் உடன்படுகின்றது. இலங்கை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பில் உயிர் வாழும் உரிமை அடிப்படை உரிமையென வெளிப்படையாகக் கண்டுகொள்ளாப்படாவிட்டாலும் 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பில் உட்கிடையாக அடங்கியுள்ளது எனக் குறிப்பிடுகின்றது. 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் உறுப்புரை 11 சித்திரவதை மற்றும் கொடூர,மனிதாபிமானமற்ற மற்றும் இழிவான நடத்தை அல்லது தண்டனையை ஏதேனும் ஒதுக்கம் ஏதுவுமில்லாது தடுக்கின்றது.

அதிமேன்மைதகு உங்களிடமும் அரசாங்கத்திடமும் மரண தண்டனையை நீக்க பின்வரும் காரணிகளைக் கருத்திற்கொள்ளுமாறு ஆணைக்குழுவானது வேண்டி முன்வைக்கின்றது.

**i)மரண தண்டனை குற்றங்களை தடுக்கின்றது**

மரண தண்டனையின் அமுல்படுத்துகை குற்றங்களை தடுக்கும் என்பதினால் பல பிரேரிப்பாளர் மரண தண்டனையை அமுல்படுத்த தூண்டப்படுகின்றார்கள். எப்படியாயினும் வினைத்திறனான நீதி அமைப்புமுறைமை மற்றும் சமத்துவமான சமூக ஒழுங்குமுறை இருப்பின் குற்றங்கள்

குறைவதற்கு வழிவகுக்கும் என்பதே எமது நிலைப்பாடாகும். இதனை சில மிகக் குறைந்தளவான குற்றங்களைக் கொண்ட நாடுகளில் காணக்கூடியதாகவுள்ளது. மரண தண்டனையானது குற்றங்களைக் குறைப்பதற்கு அல்லது குற்றத்தை தடுப்பதற்கு என்பதை நிருபிப்பதற்கு முறையான தரவுகள் ஏதும் இல்லை.

**ii)நீதி தவறிப்போகும் அபாயம் மற்றும் மரண தண்டனையின் மீளாத்தன்மையும்**

வன்மையான அரசியலமைப்பு பாதுகாப்புக்கள் மற்றும் மேன்முறையிடுவதற்கான உரிமை, வழக்கினை கேட்கும் நீதிபதி, சட்டமா அதிபா் மற்றும் நீதி அமைச்சரிடமிருந்து பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ள முடியமாக இருத்தல் ஆகியவை இருந்தும் குற்றமிழைக்காத நபர்களை குற்றமிழைத்தவர் எனத் தீர்க்கப்படும் அபாயமானது எப்போதும் உள்ளது என்பதே ஆணைக்குழுவின் நிலைப்பாடாகும்.

இலங்கையின் குற்றவியல் நீதி முறைமையில் தீவிரமான குறைகள் வெளிப்படுகின்றது என்பதே ஆணைக்குழுவின் நிலைப்பாடாகும். ஏனைய நாடுகளைப் போன்றல்லாது இலங்கையில் மேன்முறையீட்டு நடபடிமுறைகள் முடிந்தவுடன் மீண்டும் வழக்கினை திறப்பதற்கு அனுமதிக்கும் முறைமை இல்லை. அதனால நீதித்தவறிப்போகும் கடுமையான அபாயம் உள்ளது. அரசியலமைப்பிலும் நியதிச்சட்டத்திலும் குற்றவியல் நடவடிக்கைகளுக்குரிய சரியான முறைமை உத்தரவாதப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அங்கே மனித வழுக்கள் இறுதி விளைவை திரிபுபடுத்தும் வாய்ப்பு எப்போதும் உள்ளது.

புதிய புலனாய்வுத் தொழில்நுட்பங்கள் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி ஆகியவற்றினால் தீர்ப்பளிக்கப்பட்டு பல வருடங்களின் பின்னரும் புதிய சான்றுகள் வெளிவருதல் அல்லது சான்றுகளின் நம்பகத்தன்மையில் சந்தேகத்தை எழுப்புதல் அபிவிருத்தியடைந்த நாடுகள் உள்ளடங்களாக பல்வேறு நாடுகளில் நடைபெற்றுள்ளது என்பதை அதிமேன்மைதகு உங்களிடம் ஆணைக்குழு முன்வைக்க விரும்புகின்றது. ஐக்கிய அமெரிக்கா, கனடா மற்றும் ஐக்கிய இராச்சியத்தில் பல்வேறு சந்தா்ப்பங்களில் தவறாக தண்டனை வழங்கப்பட்ட மக்களை மரண தண்டனையிலிருந்து அல்லது சிறைச்சாலையில் இருந்து தசாப்தங்களின் பின்னா் விடுவித்துள்ளனா். அண்மையில் ஐக்கிய அமெரிக்க நபா் ஒருவா் நீதியான வழக்கு விசாரணை கிடைக்கவில்லை என்ற காரணத்தினால் நவம்பா் மாதம் 2015 லொயிசியானவில் பல்வேறு குற்றங்களிற்காக 23 வருட சிறைவாசத்தின் பின்னா் விடுவிக்கப்பட்டார். இவ்விசாரணையை முன்னெடுத்த புலனாய்வாளா் மற்றும் ஆரம்ப வழக்கு விசாரணையிலிருந்த நீதிபதி ஆகியோா் நீதி தவறிப்போனதை தாம் நம்புகின்றனா் என்றனா் . அதேபோல, இலங்கையிலும் வழக்கு நடவடிக்கையின் தவறான நடத்தையால் எதுவித குற்றமிழைக்காதவரையும் குற்றவாளியாக குற்றம் சுமத்தப்படலாமென ஆணைக்குழு அவதானிக்கின்றது. அவ்வாறான எடுத்துக்காட்டொன்று உயர்நீதிமன்ற வழக்கு தீர்ப்பான விஜயபால எதிர் சட்டமா அதிபர்(2001) 1 SLR 42 இல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**iii)குற்றம்சாட்டப்பட்டவா் நோ்த்தியாக எதிர்வாதிக்கமுடியாத்தன்மை**

சிறந்த வழக்கறிஞர்களை பெற்கொள்ளக்கூடிய நிதி வளங்களைக் கொண்டவா்களிலும் பாா்க்க வரப்பிரசாதங்களற்ற சூழ்நிலையிலுள்ள குற்றம் சாட்டப்பட்டவா்கள் மரண தண்டனைக்குட்படுத்தப்படும் வாய்ப்பு அதிகமாக இருக்கின்றது என்பது ஆணைக்குழுவின் நிலைப்பாடாகும். சில குற்றம்சாட்டப்பட்டவா்கள் சட்டத்தைமீறும் குற்றம் என்ற காரத்தினாலன்றி

நேர்த்தியாக எதிர்வாதம் செய்யாமை என்ற காரணத்தினால் குற்றவாளியாக்கப்படும் வாய்ப்பு உள்ளது. மேல் நீதிமன்றில் குற்றம்சாட்டப்பட்டவர் பணரீதியாக வழக்கறிஞர்களை பெற்றுக்கொள்ள முடியாத சந்தர்ப்பத்தில் அரசு தனியார் வழக்கறிஞர்களை நியமிக்கும். அவர்கள் பெரும்பாலும் இளமையானவர்களாகவும், பயிற்சி அற்றவர்களாகவும், அனுபவமற்றவர்களாகவும் போதுமான ஊதியம் கிடைக்கப்பெறாதவர்களாகவும் இருக்கின்றனர்.

**மேற்போந்த சகல காரணங்களினடிப்படையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளிற்கான சர்வதேச கட்டுறுத்தின் இரண்டாவது விருப்பத்திற்குரிய பின்னேட்டினை ஏற்று அங்கீகரிப்பதுடன் விரைவாக மரண தண்டனையை நீக்குமாறும் பரிந்துரைக்கின்றது. மரண தண்டனையானது ஒவ்வொரு குற்றங்களின் தீவிரதன்மைக்கமைய சிறைத்தண்டனைக் காலத்தினால் பிரதியீடு செய்யப்படல் வேண்டும். அதற்கமைவாக, சமூகத்தில் குறித்த குற்றத்தின் தீவிர தாக்கவிளைவைக் கருத்திற்கொண்ட தேசிய கொள்கையின் அடிப்படையில் சிறைத்தண்டனை காலம் மாற்றப்படல் வேண்டுமெனவும் நாம் பரிந்துரைக்கின்றோம்.**

Hudagama

கலாநிதி. N.D. உடகம

தவிசாளர்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

பிரதி: கௌரவ. பிரதம மந்திரி

கௌரவ. சபாநாயகர்

கௌரவ. நீதி அமைச்சர்

கௌரவ. எதிர்க்கட்சித் தலைவர்